# நூலகம்

இலக்கியம்

புத்தகச் செய்தி மாத இதழ்

ஆசிரியர்: நூலகஞானி - டாக்டர் பா. பெருமாள்

M.A., M.Lib.Sc., Ph.D.,



28-வது தேசிய நூலக வார விழாவை கல்வி அமைச்சர் மாண்புமிகு பொன்னு
தொடங்கி வைத்தார் பொது நூலகத் துறை இயக்குநர் திரு. இரா. கண்ணன் அ
அமைச்சருக்கு பொன்னாடை போர்த்தி வரவேற்றார்.



28-வது தேசிய நூலக வார நிறைவு விழாவில் மாண்புமிகு நிதி அமைச்சர் **இரா. நெடுஞ்செழியன்**, பொது நூலக இயக்குநர் திரு. **இரா. கண்ணன்**, முதலியோர் கலந்துகொண்டனர். பதிப்பாளர் சங்கத் தலைவர் திரு. **இரா. முத்துக்குமாரசாமி** உடனிருக்கிறார்.

# சங்கப் பலகையின் புரட்சித் திட்டங்கள்

## தமிழ்ப் புத்தக விற்பனைப் பெருக்க...

### தொடர் நடவடிக்கைகள்—விளக்கம்

- ☐ தமிழக எழுத்தாளர்களுக்கு ''பொற்காலம்'' துவங்கி விட்டது. படைப்பாளிகள் 30% ராயல்டியை 1995 நவம்பர் முதல் பெறத் தொடங்கி விட்டனர்.

- ☐ நூற்றாண்டை நெருங்கும் அல்லயன்ஸ் கம்பெனி, பதிப்பகத்தார், துக்ளக் ஆசிரியர் ''சோ'', இந்த முன்னோடித் திட்டத்தை பாராட்டி, உடனடியாக ஒப்புதல் அளித்து நடைமுறைக்கும் கொண்டு வந்து விட்டனர்.

  பாராட்டுகள்.

- ☐ பதிப்பாளர்கள், நூலாசிரியர்களுக்கு 10% ராயல்டியை **மட்டுமே**. கொடுத்தால், உபரியாக 20% ராயல்டி தொகையை (மொத்தம் 30% சன்மானத் தொகையாகும்) சங்கப்பலகையே, தான் கொள்முதல் செய்யும் எல்லா புத்தகங்களுக்கும் கூடுதல் ராயல்டித் தொகையை படைப்பாளிகளுக்கே நேரடியாக பட்டுவாடா செய்கிறது.

- ☐ நூலாசிரியர்—பதிப்பாளர் மேலும் பல வெளியீடுகளை விற்பனை செய்ய இதுவே நல்ல தருணம்.

- ☐ 1000 பிரதிகள் விற்க, பல வருடங்களாகின்றன என்ற பதிப்பாளர் குறை, குற்றச் சாட்டு இனி மறைந்து விடும். கவலையை விடுங்கள், சங்கப்பலகை தான் உதவ முன் வந்து விட்டதே!

- ☐ சங்கப்பலகை கொள்முதல்களுக்கு 45 நாட்களில் பில்—செக்மூலம் பணப்பட்டுவாடா நடைபெறும் என்றே அறியப்படுகிறது. தெரிகிறது.

□ 1995 நவம்பரில் 30 புத்தகங்களைத் தேர்ந்தெடுத்து, தலைப்புக்கு 900 பிரதிகளை சங்கப்பலகை கொள்முதல் செய்து, வாசகர்கள் படிக்க வழங்கி வருகிறது. படிக்கும் ஆர்வத்தை பழக்கத்தை வளர்த்துப் புரட்சியைத் தொடங்கி வைத்து விட்டது.

□ சங்கப்பலகை **நான்கு வகையான சேவைப்** பிரிவுகள் மூலம், தமிழ்ப்புத்தக விற்பனையைப் பெருக்க திட்டமிட்டுள்ளது. அவை இவை:

அ) சங்கப்பலகை, மாதந்தோறும் 30 தலைப்புகளைத் தேர்வு செய்து, ஒவ்வொரு நூலிலும் 900 பிரதிகளை கொள் முதல் செய்கிறது. இது firm order—45 நாட்களில் பதிப்பாளர், எழுத்தாளர்—பதிப்பாளர், விற்பனையாளர் பணப் பட்டுவாடாவைப் பெறுவர்.

ஆ) தமிழகம் முழுவதிலும் அமைந்து செயல்படும் சங்கப் பலகை **விற்பனை மையங்களில்** விற்பனைக்காக—sale of Return—அடிப்படையில், பதிப்பாளர்களே, தங்கள் வெளியீடுகளை, வாசகர்களின் Demand—ஐ கணித்து, யூகித்து, அதற்கு ஏற்ப, நேரடியாக விற்பனை நிலையங்களுக்கு Supply செய்யலாம். 45 நாட்களில். விற்பனையான தொகையை பதிப்பாளர்கள் பெற்றுக் கொள்ளலாம். மேல் விபரம் தேவை எனில், சங்கப் பலகைக்கு எழுதலாம் நூலகம் இலக்கியம் மாத இதழும் தகவல்களைத் தரும்.

இ) 1000 தமிழ் முன்னோடிகள் மாத மாதம் ரூ. 1000க்கு சுமார் 30 தலைப்புகளை தேர்ந்தெடுத்து வாங்க இருக்கிறார்கள். சங்கப்பலகை, கொள்முதல் செய்து, இவற்றிறகும் (30% ராயல்டியை எழுத்தாளர் பெறுவர்) பணப்பட்டுவாடாவை. 45 நாட்களில் தொடங்கும். இந்தத் தமிழ் முன்னோடிகள். இப்படி தாங்கள் மாதாமாதம் வாங்கும் புத்தகங்களை, பள்ளி கல்லூரி தொழிலக நூலகங்களுக்கும் வழங்க இசைந்துள்ளார்கள். முன் வருகிறார்கள்.

ஈ) சங்கப்பலகை—புத்தக பரிசுக்கூப்பன் ரூ 5, 10, 25, 50, 75, 100, 200.........500, 750, 1000 இப்படி பல வரிசைகளை வெளியிடும். பதிப்பாளர், சங்கப்பலகை ஒருங்கிணைந்து செயல்படுத்த இருக்கும் **மாநில அளவிலான** திட்டமிது. விற்பனையாளர்கள் ஒப்புதல் கூட்டுறவுடன், வாசகர் எங்கும் எந்த புத்தகத்தையும் வாங்கலாம். பரிசளிக்கலாம். கூப்பனாகவும் பரிசளித்தால், பரிசைப் பெறுபவர், கூப்பனைக் கொடுத்து, தாங்கள் விரும்பும் நூலை வாங்கிக் கொள்ளலாம். சங்கப்பலகைக்கு கூப்பன்களை அனுப்பி, மாதா மாதம் பணப் பட்டுவாடாவைப் பெறலாம்.

□ இனி என்ன உறக்கம்! எழுந்திடுவீர்!! செயல்படுவோம் வாரீர்!!! என நூலகம் இலக்கியமும் அழைக்கிறது.

□ **புத்தக நண்பன், நூலகம் இலக்கியம்**

மாத இதழ், 1996—இல் புதிய வாசகர் தகவல் சேவைகளைத் துவக்குகிறது. வாசகர்களே! தங்கள் எண்ணங்களை **எழுதுங்களேன்**. ஆலோசனைகளை வரவேற்கிறோம்.

---

சங்கப் பலகை

# 1995 நவம்பர் மாதத்தில் தேர்வு செய்து கொள்முதல் செய்த புத்தகங்கள்

| | | |
|---|---|---|
| 1. | இந்திரா காந்தி | மலரும் நினைவுகள் |
| 2. | சி. சு. செல்லப்பா | மாயதச்சன் |
| 3. | ரா. சீனிவாசன் | திருக்குறள் செய்திகள் |
| 4. | விந்தன் | பெரியார் அறிச்சுவடி |
| 5. | ரமணிசந்திரன் | உறங்காத கண்கள் |
| 6. | இரா. பூபதி | உடல் நலம் காக்கும் எளிய யோகாசனங்கள் |
| 7. | செ. யோகநாதன் | நியாயப்படுத்தப்பட்ட கொலைகள் |

| | | |
|---|---|---|
| 8. | கா. ஜெயராமன் | குழந்தை உலகம் |
| 9. | சோலை. சுந்தரபெருமாள் | வண்டல் |
| 10. | எஸ். வையாபுரிப்பிள்ளை | தமிழ்ச்சுடர்மணிகள் |
| 11. | வைரமுத்து | இந்தப்பூக்கள் விற்பனைக்கல்ல |
| 12. | சுகுமாரன் | வண்ணத்துப்பூச்சி சொன்ன கதை |
| 13. | க. பழனி துரை | புதிய பஞ்சாயத்து அரசாங்கம் |
| 14. | பாலபாஸ்கர் | உச்ச நிதிமன்றத்தின் முற்போக்கு தரப்புகள் |
| 15. | எஸ். பழனிசாமி | எய்ட்ஸ் என்னும் கொடிய நோயைப் பற்றிதெரிந்து கொள்ளுங்கள் |
| 16. | ஜி. முத்து | உயர்வு உங்கள் கையில் |
| 17. | மணவை முஸ்தாபா | சிறுவர் கலை களஞ்சியம் |
| 18. | மாரி. அறவாழி | அழுக்கு மனிதர்கள் |
| 19. | சங்கரநாராயணன் | கூடல் காற்று |
| 20. | சா. கந்தசாமி | விசாரணை கமிஷன் |
| 21. | எ.சி.எஸ். மணி | பேசும் ஆடு |
| 22. | ஜெயலட்சுமி | தாய்மையும் பிரசவமும் |
| 23. | இரா. கதிரேசன் | மருத்துவ தமிழ் களஞ்சியம் |
| 24. | திலகவதி I. P. S | எட்டுத்திக்கிலிருந்து ஏழுகதைகள் |
| 25. | சோ | காமராஜை சந்தித்தேன் |
| 26. | நந்திதேவன் | நவீன நியூமராலஜி |
| 27. | சத்யா ஸ்ரீனிவாசன் | மகாபாரதக்கதைகள் |
| 28. | உமா | காந்தியம் அழைக்கிறது |
| 29. | வல்லிக்கண்ணன் | புதுமைப்பித்தன் வாழ்க்கை வரலாறு |
| 30. | தி. ஜானகிராமன் | அம்மா வந்தாள் |

வாசகர்




அரங்கநாதன் அறிவுரைப்படி நூலகத்துறை இதழ் வளர, அதைக்காசு கொடுத்து வாங்க வேண்டும். இலவசமாக பெறக்கூடாது.

—இயக்குநர் வே, தில்லைநாயகம்
D.P.L. (Retd) கம்பம். 626516

நூலகம் புதுமை நிறைந்த இதழாக விளங்குகிறது.

—புவனைக் கலைச்செழியன்
கீரப்பாளையம்— 608 602.

நூலகம் இலக்கியம் இதழை வளர்ப்பது
நம்மை நாமே வளர்ப்பது போல

—கவிஞர் மோகனரங்கன். சென்னை— 88

---

பால்ய நண்பரின் நூலகம் இதழ் இதழுக்கு இதழ் மெருகு கூடுகிறது.

—ஆசிரியர் இரா. நடராசன்
திருவண்ணாமலை 606 601.

அந்தத் துறைக்கு முழுமையாக அர்ப்பணம் செய்து கொண்ட ஒருத்தரால் தான் இந்தப்பணியைச் செய்ய முடியும் என்பதைத் தங்களின் இதழின் சிறப்பு தெரிவிக்கிறது.

இதழே, ஒரு குட்டி நூலகம் நமது இலத்திற்குள் நுழைந்து விட்ட உருப்படியான பெருமிதத்தைத் தந்தது.

— ஜ.ரா. சுந்தரேசன் (பாக்கியம் ராமசாமி)
சென்னை— 600 031.

இப்படிப்பட்ட நூலை மாத இதழாக கொண்டுவர மிகுந்த மனோதிடமும் திறமையும் வலிமையும் வேண்டும் பாராட்டுகிறேன்.

—கே. வெங்கடாசலம் L.M.E.
உடுமலைப் பேட்டை—642 126

நூலகத்தை அட்டைக்கு அட்டை பக்கத்திற்குப் பக்கம் வரிக்கு வரி படித்து மகிழ்ந்தேன் சிறந்த தொண்டு.

—T.V.—வெ. நல்லதம்பி
சென்னை—600 041.

பன்முக பாங்கில் நூலகம் இலக்கியம் மணம் விரிக்கிறது. படித்துக்கிழித்தான் உளவியற்பங்கான வழி காட்டுதல்.

—தமிழப்பன், சென்னை—40.

திருக்குறள் நூலகம்— ஓர் அரிய செய்தி

—முத்து எத்திராசன் சென்னை—17.

உற்சாகமாய் தொடருங்கள்.

—வே. சபாநாயகம்
விருத்தாசலம் 606 001.

'நூ. இ' படித்துக்கொண்டே இருக்கிறேன்.

—புலவர் பி.சி. கணேசன்
சென்னை—600 078.

---



**என்னுடைய முதல் உந்து சக்தி மனிதப் புனிதன் 'அப்துற்-ரஹீம்' என்கிறார்.**

**'மெர்வின்'**

See also

(பக்கம் 32- ஐ காண்க)

# புதிய வரவு

**காந்தி பொம்மை**. ஜெ எத்திராஜன், அக்டோபர், 1995, ப 96. ரூ 25. குழந்தை இலக்கியக் கழகம் 72, கிருஷ்ணா நகர், மூவாசம்பட்டு அருகில், சென்னை—600 091, 1947—1950 ஆண்டுகளை சிறுவர் இலக்கிய வரலாற்றில் ஒரு பொற்காலம் எனலாம். சிறுவர் இலக்கியச்செல்வரின் சிறந்த சிறுவர் கதைகள்.

**பெற்றோர் இளைஞர்கள் கைபேடு** டாக்டர் அப்துல் பாரி. டிசம்பர், 1995 ப. 48 ரூ 25. படங்கள் ஜெயராஜ், நவமணி பதிப்பகம், 12, 2வது பெருஞ்சாலை நகர வளர்ச்சிக் குடியிருப்பு, சென்னை—600 004

13 முதல் 19 வயதான இளைஞர் இளைஞர்களுக்கு நல்வழி காட்டும் நூல் இது. இது படித்து சிந்திக்க வேண்டிய நூல், அனுபவ உண்மைகள், வழி காட்டி நூல். **தமிழில் இத்தகைய நூல் வெளிவருவது இதுவே முதல் முறை**.

**திருக்குறள் அறுபத்தொன்று**, பேராசிரியர் திருக்குறள் க. பாஸ்கரன் நவம்பர் 1995. ப. 28. திருமண அன்பளிப்பு நூல், விலை, குறிப்பிடபடவில்லை. கருணாகரன் நினைவு திருக்குறள் நூலகம் அண்ணா நகர் சென்னை – 600 040.

இறுதிக்காலத்தில் அறம் செய்வோம் என எண்ணாமல், ஒவ்வொரு நாளும் அறம் செய்தல் வேண்டும் அவ்வறம் உடல் அழியும்போது உயிருக்கு உறுதுணையாக அமையும்.

—திருவள்ளுவர்—குறள் 36.

**ஒரு ஆசிரியரின் கதை**. ''அருணை சிவா (T. சிவப்பிரகாசம்) நவம்பர், 1994 ப, 128, ரூ 18. இளங்கோ மன்றம் எண். 15 13வது தெரு ஜெய்நகர் அரும்பாக்கம் சென்னை— 600 106, ஆசிரியர்களில் சக்தியால்தான் கிராமங்கள் செழிக்க முடியும் என்று நிரூபிக்கும் நாடகம்.

**தங்கமும் தங்க நகைகளும்**. ''வி. ஏ. எம்'' டிசம்பர், 1994, ப, 138, ரூ 22, முல்லை நிலையம் 48 புதுத் தெரு, மண்ணடி, சென்னை—600 001. தங்கத்தில் முதலீடு செய்வது நமது பாரம்பரியாமான பழக்கம், தங்கத்தில் முதலீடு எவ்வாறு செய்வது? தரமிகுந்த நகைகளை எவ்வாறு வாங்குவது என்பதை தெளிவாக கூறும் பயனுள்ள நூல்.

ஆசிரியரே ஒரு வியாபாரியாக இருந்து கொண்டு வாடிக்கையாளர்கள் ஏமாராமல் இருப்பதற்கு இவர் கூறும் வழி வகைகள் நம்மை வியப்பில் ஆழ்த்து கின்றது.

கல், முத்துமதிப்பு, கூலி, சேதாரம் சேர்க்காமல் நிறைய நகைக் கடைகள் வாடிக்கையாளர்களை தங்கள் வலையில் வீழ்த்துவதற்காக விளம்பரங்களை செய்வதின் பின்னணியை சிறந்த, எளிய எடுத்துக் காட்டுகளுடன் இந்நூலில் விளக்கப் பட்டுள்ளது.

**கடந்துவந்த பாதையிலே...** மு, செல்வராசன செப்டம்பர், 1995, ப 140. ரூ 25. தமிழாசி பதிப்பகம். 181, ராஜாபாதர் தெரு, தியாகராய நகர், சென்னை—600 017. பதிப்பாளர், படைப்பாளர், பன்முக மனித நேயம் மிக்கவரின் வாழ்க்கை வரலாறு.

**கொஞ்சு தமிழ்க் கோலங்கள்**. முத்தமிழ்க் கவிஞர் டாக்டர் புலவர் ஆலந்தூர் கோ. மோகனரங்கன், டிசம்பர், 1994 ப,256 ரூ. 60. வசந்தா பதிப்பகம், 14, 2வது தெரு தெற்குப்பிரிவு, குன்றக்குடி நகர், ஆதம்பாக்கம் சென்னை-600 088, சிறந்த கருத்துக்களை அள்ளித்தரும், ஆசிரியன் அழகு தமிழ்க்கவிதைத் தொகுப்பு நூல்.

**எளிய முறையில் தமிழை எழுத...** தமிழப்பன், ஜனவரி, 1995. ப 16. ரூ5./418—டி வீட்டு வசதி வாரியம் மலர்க் குடியிருப்பு, அண்ணா நகர் (மேற்கு) சென்னை-600 040.

தமிழ் எழுத்துக்கள் கோடும் சுழியும் கொண்டவை. எழுதும் முறைகளைத் தெரிந்து கொண்டால் தமிழ் எழுத்து எழுதுவது எளிதானது என்பது புலனாகும். மணலைக் குவித்து, அதில் எழுதிப் பழகலாம் மரக்கட்டைகளில் எழுத்துக்களைக் குடைந்தெடுத்து, மணலை நிரப்பி விரல்களால் விளம்பிப் பழகலாம். இயன்றவரை ஒரு சொல்லின் எழுத்துக்களைப் பிரிக்காமல் ஒரே வரியில் எழுதுதல் நன்று. இப்படி சில எளிய முறைகள் வரைபடமிட்டு விளக்கும் நூல்.

---




தமிழகப் பொது நூலகத்துறை கோலாகலமாகக் கொண்டாடிய தேசிய நூலக வார விழாச் செய்திகள்.

- ☐ பெரிய நகரங்களில் மகளிர் நூலகம் அமைப்பு
- ☐ 625 கிராம நூலகங்கள் அமைக்கத் திட்டம்
- ☐ சிறந்த நூலாசிரியருக்கு அண்ணா விருது
- ☐ விழி யிழந்தோருக்கு பெரிதும் பலனளிக்கும் ஆடியோ கேசெட் வெளியீடு
- ☐ நூலகத்துறைக்கு ரூ16.42 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு
- ☐ புத்தகக்கண்காட்சி — தமிழ் பதிப்பாளர்களின் உற்சாகப் பங்கேற்பு

# பெரிய நகரங்களில் மகளிர் நூலகம் அமைப்பு

சென்னை, கோவை, சேலம், திருச்சி, மதுரை, திருநெல்வேலி போன்ற இடங்களில் பெண்களுக்காக பெண்களால் நடத்தப்படும் நூலகங்கள் திறக்கப்பட உள்ளன.

பதிப்பாளர்களும் படைப்பாளிகளும் காலத்திற்கேற்ற பண்பாடு, மனிதநேய, சமர்தம சமுதாயத்தை வளர்க்கின்ற நூல்களை உருவாக்க வேண்டும். தமிழ்நாட்டில் இருந்து இன, மத போராட்டங்களை அறவே நீக்குகின்ற எளிய நடையில் உள்ளதான நூல்களை பதிப்பாளர்களும் படைப்பாளிகளும் உருவாக்க வேண்டும். இந்த ஆண்டு முதல் சிறந்த நூலாசிரியர்களுக்கு **'அண்ணா விருது'** வழங்கப்பட உள்ளது. இவ்வாறு அமைச்சர் மாண்புமிகு பொன்னுசாமி பேசினார்

தமிழ் புத்தகங்கள் 1995 ஒரு கண்ணோட்டம் 1996இல் வெளியிட்டு, நூல் தேர்வுக்கும் ஆய்வுக்கும், புதிய நூல்களை வெளியிடவும் உதவ வேண்டும் என்று தமிழக நிதித்துறை அமைச்சர் மாண்புமிகு இரா.நெடுஞ்செழியன் நிறைவு விழாவில் பேசும்போது கேட்டுக் கொண்டார்.

# 625 கிராமங்களில் பொது நூலகங்கள் அமைக்கத் திட்டம்

தமிழகத்தில் இந்த ஆண்டில் 625 கிராமங்களில் நூலகங்கள் அமைக்கத் திட்டமிட்டுள்ளது என்று கல்வி அமைச்சர் பொன்னுசாமி தெரிவித்தார்.

சென்னையில் தேவநேயப் பாவாணர் மாவட்ட மைய நூலகத்தில் நடைபெற்ற 28-வது தேசிய நூலக வார விழாவை அவர் செவ்வாய்க்கிழமை தொடங்கி வைத்துப் பேசியதாவது.

மாநிலத்தில் 1545 நூலகங்களும் 1300 கிராம நூலகங்களும் உள்ளன. 5 ஆயிரம் பேருக்கு மேற்பட்ட கிராமங்களிலும் நூல் நிலையங்கள் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. அதன்படி 625 கிராமங்களில் நூல்நிலையங்கள் அமைக்கப்படும்.



அனைவருக்கும் கல்வி என்பதை கி.பி. 2000-இல் எட்ட வேண்டும் என்று மத்திய அரசு இலக்கு நிர்ணயித்துள்ளது. அந்த இலக்கை 1998-லேயே எட்டி விட வேண்டும் என தமிழகம் திட்டமிட்டுள்ளது.

நூலக மேம்பாட்டுக்கு அரசு மட்டும் முயற்சி எடுத்தால் போதாது. உள்ளாட்சி அமைப்புகளும் இதில் முக்கிய பங்கேற்க வேண்டும். மக்களின் ஒத்துழைப்பும் அவசியம். இது மக்கள் இயக்கமாக மாறி விட வேண்டும். ஐ.ஏ.எஸ் போன்ற போட்டித் தேர்வுகள் எழுதுவதற்கான கல்வி மையங்களை, மாவட்ட நூலகங்கள் இருக்கும் இடங்களில் அமைத்துள்ளோம். இந்த மையங்கள் அமைக்கப்படாத மாவட்டங்களிலும் இனிமேல் அமைக்கப்படும் என்றார் பொன்னுசாமி.

முன்னதாக ஐ.ஏ.எஸ். தேர்வு எழுதும் மாணவர்களுக்கான கல்வி மையத்தை அமைச்சர் திறந்து வைத்தார். சென்னை நூலக ஆணைக் குழுவின் செயல்பாடுகளை விளக்கும் விடியோ கேசட்டையும் அவர் வெளியிட்டார்.

நூலக வார விழாவை யொட்டி அமைக்கப்பட்டுள்ள புத்தகக் கண்காட்சியை சென்னை வானொலி நிலைய இயர்குநர் விஜயதிருவேங்கடம் திறந்து வைத்துப் பேசினார். குழந்தைகள் புத்தகங்கள் படிக்கும் வழக்கத்தின் மூலம்தான் அறிவைப் பெற முடியும் என்றார் அவர்

கல்வித்துறை கூடுதல் செயலர் ஏ.எம். ராமன் பேசும் போது, அறிவொளித் திட்டத்தின் தொடர்ச்சியாக, அவர்களுக்கு கல்வி அளிப்பதற்காக மாவட்டங்களில் 2000 படிப்பங்கள் வீதம் துவங்கப்படுவதாகத் தெரிவித்தார். 23 மாவட்டங்களில் அறிவொளித் திட்டம் செயல்படுத்தப்பகிறது. அதில் 18 மாவட்டங்களில் அத்திட்டத்தின் இரண்டாவது கட்டம் செயல்படுகிறது என்று அவர் குறிப்பிட்டார்.

பொது நூலகத் துறை இயக்குநர் ஆர். கண்ணன் வரவேற்றார். ஐஏஎஸ் போன்ற போட்டித் தேர்வுகளை எழுதும் மாணவர்களுக்காக இதுவரை 16 மாவட்டங்களில் கல்வி மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அங்கு அந்த மாணவர்களுக்குத் தேவையான நூல்கள் வைக்கப்பட்டிருக்கும். மேலும் உள்ள மற்ற மாவட்டங்களிலும் இந்த மையங்களை அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது என்று அவர் குறிப்பிட்டார். பொது நூலகத் துறை துணை இயக்குநர் சுசிலா கணேசன் நன்றி கூறினார்.

---



## பாராட்டுகிறோம்

"பூவை அமுதன்"

(5—9—1934— )

**எஸ். ஆர். கோவிந்தராசன்,**

எம்.ஏ.,பி.டி.,

**பிளாட் எண் 142 பாஸ்கர் காலனி**

**இரண்டாவதுதெரு விருகம்பாக்கம்**

**சென்னை—600 092.**

ஆண்டுதோறும் குழந்தை எழுத்தாளர் சங்கம் நடத்தும் சிறுவர் இலக்கியப் போட்டிகளுள், 1995—ஆம் ஆண்டிற்கான ஏவி எம். அறக்கட்டளையின் நாடகப்போட்டியில், திரு. **பூவை அமுதன்** அவர்கள் எழுதிய **கிராமத்துப் பையன்'** என்னும் நாடகம் முதற்பரிசாகத் தங்கப்பதக்கத்தைப் பெற்றுள்ளது.

1994-ஆம் ஆண்டு கு. எ. சங்கம் நடத்திய நாவல் போட்டியில் இவரது '**பல்லவநாட்டுச்சிறுவர்கள்**' எனும் நாவல் கோவை

எல்லப்பா— ரங்கம்மாள் அறக்கட்டளையின் இரண்டாம் பரிசினைப்பெற்றது.

**'முத்து நம் சொத்து'** என்ற இவரது சிறுவர் நாவல் 1995-ஆம் ஆண்டிற்கான அனந்தாச்சாரி அறக்கட்டளையின் சிறப்புப் பரிசினைப் பெற்றுள்ளது.

1973-இல் **'நமது உள்ளம்'** என்னும் தம் உளவியல் நூலுக்காகத் தமிழக அரசின் பரிசினைப் பெற்றுள்ளார்.

**'தெய்வ மகள்'** எனும் இவரது புதினம் 1981ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக் கழகத்தில் பட்ட வகுப்புக்களுக்குத் தமிழ்த் துணைப் பாட நூலக வைக்கப் பெற்றது.

**'போரை வெறுத்தவன்'** என்னும் சிறுகதை சென்ற ஆண்டும் **'எல்லாம் நன்மைக்கே'** எனும் சிறுகதை இவ்வாண்டும் தமிழக அரசின் ஆறாம் வகுப்புத் துணைப்பாட நூல்களில் இடம் பெற்ற பெருமைக் குரியவையாகும்,

6000க்கும் மேற்பட்ட இவர்தம் இசைப்பாடல்கள் 46 கேசட்டுகளாக வெளிவந்துள்ளன. வானொலியில் இவரது பாடல்கள் ஒலி பரப்பாகிவருகின்றன.

இதுவரை, பலதுறைகளிலும் 219 நூல்களைப் படைத்துள்ள இவர் சிறுவர்களுக்கென 82 நூல்களை எழுதியுள்ளார் என்பது சிறப்புக்குரியது ஆகும்,

இவரது நூல்களை வெளியிடும் பதிப்பகத்தார் சிலர் ஒன்று சேர்ந்து தமிழகம் வியப்புறும்படியாக 8-10-94 அன்று இவருடைய அறுபதாம் ஆண்டு நிறைவு விழாவினைச் சிறப்பாக கோண்டாடியதோடு, இவர் எழுதிய புதிய பத்து நூல்களையும் அந்த விழாவின்போது வெளியிட்டு இந்தச் சாதனையாளருக்குப் பெருமை சேர்க்கும் சாதனையைப் படைத்துள்ளார்கள் என்பது இலக்கிய உலகத்தின் சிறப்பாகக் குறிப்பிடப் பெற வேண்டிய ஒன்றாகும்.

சிறுவர் இலக்கியச் செம்மல், முத்தமிழ் வித்தகர், பாவலர் பெருந்தகை என்று பலராலும் பாராட்டப்பெறும் பூவை அமுதன், மேலும் பயனுள்ள நூல்களைப் படைத்தும் பாராட்டும் பரிசும் பெற்றுப் பல்லாண்டு வாழ்கவென நூலகம் இலக்கியம் வாழ்த்தி மகிழ்கிறது.

# தமிழ்ப் புத்தகங்கள், 1995

- தமிழ் எழுத்தாளர்களே, பதிப்பாளர்களே, பேராசிரியர்களே, நூல் விற்பனையாளர்களே,

- **தமிழ் நூல்கள் 1995**, 1996 ஜனவரி இறுதியில் சிறு வெளியீடாக வெளியிட உதவ வேண்டுகிறோம்.

- தங்கள் வெளியீடு ஒவ்வொன்றின் ஒரு பிரதியை அனுப்பி உதவுங்கள்.

- நூல் விவர அட்டவணைக்காக ஒவ்வொரு நூலின், தலைப்பு, ஆசிரியர், பதிப்பாளர் வெளியிட்ட மாதம் ஆண்டு, பதிப்பு, பக்கங்கள் விலை, வகை, சிறப்பு இவை பற்றிய 'புத்தக விவரங்களை' 2-1-1996க்குள் நூலகம் இலக்கியம். 6 மு வ தெரு சென்னை— 106க்கு அனுப்பி உதவ வேண்டுகிறோம்.

- இது போலவே, 1994, 1993, 1992, 1991, 1990 இப்படிப் பின்னோக்கியும், கம்ப்யூட்டரில் Bibliographical Data base 1995 — Bibliography — நூற்றொகை —தயாரிக்க, விரைவாக வேலைகள் நடந்து வருகின்றன.

- தலைப்பு அகரவரிசை. ஆசிரியர் அகரவரிசை, பொருள் வாரி பட்டியல்களும் தயாரிக்கப்படும்

- பட்டியலால் பயன், பலன் பல உண்டு!

- 1995 ஜனவரி முதல்வாரத்திற்குள் 1995 தமிழ் நூல்களின் விவரங்களையும் புத்தகங்களையும் அனுப்பி உதவிடுவீர்!

# CURRENT CONTENTS

**புதிய தகவல் பணியைத் துவங்க வேண்டும்**
**மருத்துவப் பல்கலைக் கழகம் இதைக் கவனிக்கலாம்!**
**நூலகச் சேவையில் கால விரயம் கூடாது**
**தமிழ் பத்திரிகைகள் கவனிக்குமா?**
**உடல் நலம்—வைத்தியம்—ஆரோக்கியம்**

சம்பந்தப்பட்ட பல பருவ ஏடுகள் வெளி வருகின்றன. எல்லா ஏடுகளையும் எல்லாரும் வாங்க இயலாது.

பொருளடக்கத்தை மட்டும் தரும் புதிய பகுதி CURRENT CONTENTS இதைப் படியுங்கள். பயனுடைய கட்டுரை படிக்க வேண்டுமாயின், ORIGINAL பிரதி பெற்று பயனடைய லாம். சென்னை-8 தேசிய நூலகமான கன்னிமாரா பொது நூலகத்திற்கு வராத பத்திரிகைகளே இல்லை. அங்கும் எழுதிப் பெறலாம்

வாசகர்கள் படிக்க வேண்டிய கட்டுரைகள் கருத்துக்கள் முழுவிவரம் அறிய-உங்கள் நலம் நாடும் தன்வந்திரி படியுங்கள் பயனடையுங்கள்.

**தன்வந்திரி**

ஆரோக்கியம்+ அழகு+ அந்தரங்கம்.
குடும்ப நல மாத இதழ் அக்டோபர், 1995, விளை ரூ 6.

- ☐ கனவுகளின் பலன்கள்
- ☐ பிறந்த சிசுவின் தினங்கள்
- ☐ அப்பாவுக்கு பொண்ணுதான் பிடிக்கும் ஆனால்...
- ☐ மஞ்சள் காமலைக்கு ஆயுர்வேத நிவாரணம்
- ☐ சதா தலைவலி காரணம் என்னவாக இருக்கும்
- ☐ மலட்டுத் தன்மையைப் போக்க ஒரு மருந்தில்லா மருத்துவம்
- ☐ தனிமையுணர்வில் இருந்து மீள்வது எப்படி?
- ☐ மாதவிடாய் நின்ற பின்னும் கருத்தரிக்கும் அபாயம் உண்டா?
- ☐ உடல் இளைக்க என்னதான் செய்ய வேண்டும்?
- ☐ சக்கை உணவு
- ☐ பெண்ணுறுப்பு நோய்க்கு நிவாரணம் தரும் யோகர்ட்
- ☐ மூல நோயாளிகள் செய்ய வேண்டிய பயிற்சி

- ☐ முரட்டுக் காதலனை எப்படிச் சமாளிக்கலாம்,
- ☐ பூப்பெய்துவதற்கு முன் ஒரு பெண் ஆணோடு புணர முடியமா?
- ☐ சுய இன்பம்
- ☐ குழந்தைகள் வாந்தி எடுப்பது எதனால்?
- ☐ உடலுறவில் ஆர்வமில்லாத கணவனை உற்சாகப் படுத்துவது எப்படி?
- ☐ குடி. செக்ஸ் ஆர்வத்தைக் கூட்டும், செக்ஸ் செயல் திறனைக் குறைத்துவிடும்.
- ☐ **We Carry your Health**
- ☐ கேள்வி — பதில் இலவச மருத்துவ ஆலோசனை
- ☐ கவர்ச்சிக்கு ஒரு பயிற்சி.
- ☐ மகளிர் மட்டும்
- ☐ இன்னும் பல புதிய தகவல்கள் — பகுதிகள் — செய்தி

---

**ஹெல்த் & Beauty**

மாறுபட்ட மருத்துவமாத இதழ் மலர்—3;
இதழ்—4; டிசம்பர், 1995. விலை ரூ10,

பொருளடக்கம்— பிடித்தால்—பத்திரிகையைப் படியுங்கள் பலனுண்டு—பிரதி வேண்டுமா? எழுதுங்கள்.

---

- ⊗ கிரகணத்தால் மன நிலை பாதிக்குமா?
- ⊗ மண்ணை உண்ணும் மனிதர்கள்!
- ⊗ திக்குவாய் பற்றி...
- ⊗ மெல்லோட்டம்... நல்லோட்டம்!
- ⊗ சிடுக்கா சிகிச்சை
- ⊗ விசித்திர நோய்கள்
- ⊗ அமெரிக்காவில் முடியாத புற்று நோயைக் குணமாக்கியவர்!
- ⊗ கல்லீரல், சிறுநீரக, இதய உபாதைகளுக்கு...
- ⊗ 'காலார்' — தொற்று நோய் தொடரில்!
- ⊗ நவரத்னக் கற்களின் மருத்துவக் குணம்!
- ⊗ அல்சர் நோயாளி பால் சாப்பிடலாமா?
- ⊗ வாய்ப் புற்றுக்கு சித்தா?
- ⊗ சரித்திர முக்கியத்துவம் கொண்ட சட்டம்!
- ⊗ விளக்கம் பெற விரும்பின்—டாக்டர்கள் விலாசங்கள்,
- ⊗ கேட்டுப் பெற்ற முகவரிகள்

---

Edited printed and published by NOOLAGAGNANI Dr Pa PERUMAL, M. A., M Lib. Sc., Ph. D.; from 6, Mu. Va. Street, Arumbakkam, MADRAS — 600 106. Phone No. 484 50 4. Printer P. AYYASAMY at Thirumalai Deivam Art Printers 14, Yadaval Street, Aminjikarai, MADRAS—600 029.

# ஆனந்த விகடன் நூலகச் செய்தி விமரிசனம்

**அது லைப்ரரி!** மிஸ்டர் ரவுண்டானா ஆனந்த விகடன் செப்டம்பர் 1995 வார இதழில் பிரிட்டீஷ் கவுன்சில் லைப்ரரி, கம்ப்யூட்டர் மயமான விழாச் செய்தியை விமரிசனத்துடன் எழுதி இருந்தார். இதைப்பார்த்ததும் ஸ்ரீஸீதர்ஸன ஆழ்வார், தமது விமர்சனத்தை எழுதி அனுப்பியுள்ளார்.

**செய்தி**

நமது அரசு லைப்ரகளில் எலிகளும் கரப்பான் பூச்சிகளும் நடமாடிக்கொண்டிருக்கும் இந்த சூழ்நிலையில் கம்ப்யூட்டரும் ஏஸி வசதியுமாகப் பொலிவு பெற்றிருக்கிறது சென்னையில் இருக்கும் பிரிட்டிஷ் கவுன்ஸில் லைப்ரரி. நம்ம ஊர் லைப்ரரி களில் சென்று மருத்துவம் என்று எழுதியிருக்கும் பகுதிகளில் விடிய விடிய தேடினாலும் மருத்துவம் சம்பந்தப்பட்ட சரியான புத்தகம் கிடைப்பதில்லை. இங்கு கம்ப்யூட்டரிடம் போய் நின்றாலே போதும்... 'என்னென்ன புத்தகங்கள்' யார் எழுதினார்கள் எந்த வரிசையில் இருக்கிறது. எல்லா விவரங் களையும் அது கொடுத்து விடுகிறது.

லைப்ரரிக்குள் நுழைந்த சில நிமிடங்களிலேயே நீங்கள் தேடி வந்த புத்தகத்தோடு வெளியில் வந்து விடலாம். அண்ணா சாலையில் ஹைதர் அலி காலத்திய அதே ஸ்டைலில் தூங்கி வழிந்து கொண்டிருக்கும் சென்னை மாவட்ட மத்திய நூலகத்துக்குப் பின்புறத்தில் தான் இந்த பிரிட்டீஷ் கவுன்சில் லைப்ரரியும் இருக்கிறது! என்னே பொருத்தம்!!

**செய்தி விமரிசனம்:**

- பணி மேன்மையை அனைவரும் பாராட்டியே தீருவர்!
- சென்னை டெலிபோன் டைரக்டரியில் இந்த நூலகத்தை **வாடகை நூலகம்** எனவே வகைபிரித்து மஞ்சள் பக்கங்களில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. செய்தி.

- தமிழ் நாடு அரசு, LLA இந்த நூலகத்திற்கு இடம் தரும் போது, வாடகை நூலகம் நடத்துவார்களா என்பதை அறியார்? LLA மறுபரிசீலனை செய்ய வேண்டிய நேரமிது.

- வாடகை நூலகம் என்றால், சென்னை கல்லூரிச் சாலையிலுள்ள ஏஷியாடிக் நூலகம் போல் படிப்பதற்கு கட்டணம் வசூலிப்பது என்று பொருள்படும்.

- U K-இல் அரசு நூலகங்களில் கட்டணம் வசூலிப்பதில்லை என்பது வரலாறு. இந்தியாவில் மட்டும் ஏன் படிப்பதற்கு கூலி வாங்குகிறார்கள்?

- திருப்பித்தரும் முன் பணமாக எவ்வளவு வேண்டுமானாலும் பெற்றுக் கொண்டு, நூலகப்பணி செய்தால் இன்னும் பெருமைப்படலாம். பாராட்டலாம்.

- இந் நூலகருககு சுமார் ரூ கால் லட்சம் மாதச் சம்பளமாமே! உண்மையா? நம்மவர்கள் நிலை... மிஸ்டர் ரவுண்டாணா, இதையும் விகடனில்... ரவுண்டப் செய்யலாமே! செய்வாரா?

- பணப் பஞ்சமில்லை, அவர்களுக்கு!

- இரு நூறு ஆண்டுகள், நம்மை ஆண்டவர்கள் நடத்தும் நூலகம் இது.

- நாம் அன்றும் சுரண்டப்பட்டோம் இன்றும் சுரண்டப் படுகிறோம்

- ஒட்டுமொத்தமாக, விகடன்—மிஸ்டர் ரவுண்டானர் விளக்கமான ஊதியச் செய்திகளைத்தந்தால் நலம் பாராட்டலாம்! செய்வாரா?

---

படிப்பது என்பது ஒரு கலை

அதன் ரகசியம் : நடு நடுவில் எதைப் படிக்காமல் விட்டு விட வேண்டும் என்பது தெரிய வேண்டும்.

—பிலிப் கில்பர்ட்

# புத்தகத் திருடர்கள்

சௌரி

சில மாதங்களுக்கு முன்பு ஒரு பிரபல தமிழ்ப் பத்திரிகையில் ஒரு வேண்டுகோள் வெளியாகியிருந்தது. நாடோடிப் பாடல்களின் தொகுதி ஒன்று (கையெழுத்துப் பிரதி) என்னிடமிருந்து காணாமல் போய் விட்டது. எவராவது நண்பர் என்னிடமிருந்து இரவலாக வாங்கிச் சென்றிருக்கலாம். தயவு செய்து யாரிடமிருந்தாலும் அந்த அரியநாடோடிப் பாடல்களின் தொகுத்பை என்னிடம் சேர்ப்பிக்க வேண்டுகிறேன்'' கீழே நூலுடை ஆசிரியரின் பெயரும் தரப்பட்டிருந்தது. எனக்குத் தெரியும். அந்த முதுபெரும் பேரறிஞர், முன்னணி எழுத்தாளர். செந்நாப் புலவர் பண்பே உருவானசாந்த சீலர் அந்தத் தொகுப்பை எவ்வளவு கண்ணும் கருத்துமாகப் பாதுகாத்து வந்தார். என்பது, அது தொலைந்து போயிற்று என்பதை அறிந்ததும் நான் அதிர்ந்து போனேன் என்னுடைய பழைய மலையாள அகராதி சப்ததாராவளி, குமாரனுசான் கவிதைத் தொகுதிகள் ''கல்கி'' யின் சில பெரும் நாவல்கள் நன்னூல் மேலும் சில அரிய ஆங்கில நூல்கள் யாவும் வரிசையாகப் போன இடம் தெரியாமல் போனதற்குக் கூட நான் அவ்வளவு வருந்தவில்லை. கொடுப்பினை அவ்வளவுதான் என்று சமாதானம் செய்து கொண்டு விட்டேன் ஆனால் அந்த தமிழக நாடோடிப் பாடல் தொகுப்பு கைமாறி ஒளிந்து கொண்டதை அறிந்ததும் என் ஆறின துக்கம் கிளர்ந்தது. தஞ்சை சரஸ்வதி மகால் நூல் நிலையத்திலிருந்து பல அறிய பழைய சுவடிகளை மேல் நாட்டுக்காரர்கள் எப்படியெல்லாமோ கொண்டு சென்று விட்டதாக ஒரு புரளி உண்டு. இதிலிருந்து ஓர் உண்மை தெரிகிறது. புத்தகத் திருட்டை எந்தப் படித்த மேதாவியும் கண்ணியக் குறைவாக நினைப்பதில்லை. சிலர் அரிதாக விதிவிலக்காக இருக்கலாம். அவர்களும் தம் அரிய நூல்களைப் பறிகொடுத்திருந்தால், பழி தீர்த்துக்கொள்வதற்காவது (யாரோ எடுத்துச் சென்றதற்கு வேறு யாரிடமோ பழி தீர்த்துக் கொள்வதுதான் வழக்கம்)பிறர் புத்தகங்களை சுய உடமையாக்குவதை உரிமைப் போராகக் கருதிவிடுவர். பொதுவாகக் புத்தக பித்தர்களில் பலர், பிறரி

டமிருக்கிற புத்தகம் அல்லது புத்தகங்களை தம் பீரோவுக்குள் அடைபட்டுக் கிடக்கட்டுமே என்கிற சுவீகார வேட்கை பல படிப்பாளிகளுக்குத் தீவிரமாக உண்டு.

இதில் அதிகம் பாதிக்கப் படுபவர்கள் பொது நூல் நிலையக்காரர்கள்தாம். டெபாசிட் என்று ஒரு தொகையை வாங்கிக் கொள்ளுகிறார்கள். உண்மையாகவே தொலைந்து போய், மன்சாட்சிக்கு இணங்கி முறையிடுபவர்களிடமிருந்து நஷ்டத்தை ஈடு செய்யத்தான் இது ''பாதுகாப்பு நிதி'' யாகப் பயன்படுகிறது. புத்தகத்தை அப்படியே களவாட முடியவில்லையா? அதற்கொரு மாற்று வழி; பகுதி பகுதியாகக் கிழித்துக்கொண்டு போய் விடுவது: கண்டுபிடித்து முறையிடுபவர் மாட்டிக் கொள்ளுவார். நல்லவர் போல் நடிக்கிறார் என்று பெயர் வாங்கிக் கொள்ளுவார். நூல் நிலையக்காரர்களுக்கு அவர் மீது ஒரு கண் இருந்து கொண்டிருக்கும்.

பல பொது நூல் நிலையங்களில் விலை உயர்ந்த அரிய நூல்களை ரெஃபரென்ஸ்புக்ஸ் என்று சொல்லி பாதுகாப்பாகத் தனியிடத்தில் வைத்திருப்பதைப் பார்க்கலாம். அந்தப் பகுதியிலும் கைவரிசையைக் காட்டியே தீருவார்கள் புத்தகக் கள்வர்கள்! இப்போதெல்லாம் கையும் களவுமாகப் பிடித்தால் தண்டிக்க வழிவகை செய்திருக்கிறார்கள்.

பல வருஷங்களுக்கு முன்பு அமெரிக்காவில் ஈஸ்ட் ஓரஞ்ச் பப்ளிக் லைப்ரெரியில் இந்தப் பிரச்னையைத் துணிச்சலோடு சாமாளிக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. பல பெரிய மனிதர்கள் எடுத்துச் சென்ற புஸ்தகங்கள் லைப்ரேரியன் ஹெரால்டு ரோத் பொறுத்திருந்து பார்த்தார். பிறகு வாசக அன்பர்களுக்குப் பணிவன்புடன் கடிதம் எழுதினார் பதிலில்லை. பொறுப்புணர்ச்சியைக் கொஞ்சம் நினைவுபடுத்தி மற்றொரு கடிதம் எழுதினார் இதற்கும் பதிலைக் காணவில்லை. அடுத்தபடி சற்றுக் கடுமையாக எழுதிப் பார்த்தார். பழையபடியே மௌனம். பிறகு, சட்டபடி நடவடிக்கை எடுப்போம் என்று நோட்டீஸ் விடுவித்தார். வாசக அன்பர்கள் அசைந்து கொடுக்கவில்லை. புஸ்தகத்திற்குப் போய் இந்தப் பயல் இவ்வளவு ஆர்ப்பாட்டம் செய்கிறானே! பணமா நகையா? என்று வேறு நையாண்டி செய்தார்களாம்.

பார்த்தார் ஹெரால்டு ரோத். (இந்தக் களவாணிகளிடமிருந்து) எப்படியாவது லைப்ரெரி நூல்களைத் திரும்ப கைப்பற்றியே தீர்வது என்று முனைந்துவிட்டார். போலீஸ் உதவியை நாடினார். போலீஸ் படை, புத்தக எத்தர்களின்

பட்டியலோடு வேட்டைக்குத் தெருவில் இறங்கியது. நடுநிசி வீடுவீடாக சென்று தூங்கிக் கொண்டிருக்கும் குற்றவாளிகளை எழுப்பிக் கைது செய்தார்கள் பதினான்கு பெரிய மனிதர்களைக் கைது செய்து கொண்டு வந்தார்கள். நூல் நிலையச் சட்டப்படி ஒவ்வொருவருக்கும் நூறு டாலர் அபராதம் விதிக்கப்பட்டது. ஐந்து பேர்கள் அபராதத் தொகையைக் கட்டவக்கு இல்லை, என்று சொல்லி சிறைவாசத்திற்கு உட்பட்டார்கள்.

பொழுது விடிந்ததும், அந்த லைப்ரெரி வாசலில் ஏகப்பட்ட கூட்டம். கெடு தாண்டியும் புத்தகங்களைத் திருப்பி தராதவர்கள் புத்தகங்களுடன் வந்து காத்திருந்தார்கள் இரண்டு தினங்களுக்குள்ளேயே திருமபிவரவேண்டிய ஆயிரத்து ஐநூறு புஸ்தகங்களும் பத்திரமாக வந்து சேர்ந்தன. கூடவே லைப்ரெரியன் ரோத் அவர்களுக்குச் சாபமும், வெசவும் அச்சுறுத்தலுமாகப் பல கடிதங்களும் போன் செய்திகளும் வந்து சேர்ந்தன. ரோத் இதற்கெல்லாம் கவலைப்படவில்லை. அவர் இலட்சியம் நிறைவேறியது. புத்தகங்கள் யாவும் திரும்பி வந்ததோடு, உபரி வருமானமாக 250 டாலர்கள் குற்றவாளிகடமிருந்து வசூலித்த தொகை வகையில் லைப்ரரிக்குக் கிடைத்தது. நூலகர் ரோத்திற்கும் தனிப் பெருமை.

தண்டிக்கப் பட்டவர்களின் ரோஷத்தைப் பாருங்கள். மிஸஸ் ஆன்ஹா, ''இனி நானோ'' என் குடும்பத்தாரோ அந்த இழவெடுத்த லைப்ரெரியின் வாசல் படியைக் கூட மிதிக்கமாட்டோம். என்று சபதம் செய்தார்.

பிரபல வியாபாரி வாரன் ஹான்ஸிலி நண்பர்களுடன் பிரிட்ஜ் ஆடிக் கொண்டிருந்த போது கைதுசெய்யப்பட்டார். உல்லாசமாகப் பொழுது போக்கியதைக் கெடுத்து விட்டானே பாவி! வெடிகுண்டு வைத்து லைப்ரெரியைத் தகர்த்து எரிய வேண்டும். அந்த ரோத் தலையில் இடிவிழ!'' என்று சாபமிட்டார்.

ஜோன்ஸ்வாஷிங்டன் என்பவர் இனி இந்த லைப்ரெரி புஸ்தகமே வேண்டாம். நான் பணம் கொடுத்தே புஸ்தகம் வாங்கிப் படித்துக் கொள்ளுகிறேன்'' என்றுமுடிவு செய்தார்.

மற்றொரு பெரிய மனிதர் ''நான் அபராதம் கட்டினாலும் கட்டினேன். எனக்குத் தர வேண்டிய கடன் பாக்கிகளையெல்லபம் நண்பர்கள் சடசடவென்று வலுவிலேயே கொடுத்துத் தீர்த்துவிட்டார்கள். இதுவும் நன்மைக்கே. ரோத் வாழ்க!''

என்ன இருந்தாலும் கௌரவப் பட்ட மனிதர்களை அற்ப புஸ்தகங்களுக்காக இப்படி அவமானப் படுத்தலாகாது'' என்று குறைப் பட்டுக் கொண்டவர்களும் ''நல்ல காரியம் செய்தான் ரோத். இல்லாவிட்டால் கொஞ்ச காலத்தில் லைப்ரெரியில் வெறும் அலமாரிதான் எஞ்சியிருக்கும்'' என்று பாராட்டியவர்களும் கணிசமாகவே இருந்தார்கள்.

—டிரண் — பழைய சோறு—

சுதேசமித்திரன்...

# 13 வகை திருட்டுகள் 24 வகை திருடர்கள்

விஞ்ஞானமுறையில் சமார்த்தியமாக வீடு புகுந்து திருடும்கலை இந்தியாவில் பல ஆண்டுகளுக்கு முன்பே இருந்து வந்த விபரம் இப்போது தெரிய வருகிறது.

சமஸ்கிருத இலக்கியம் "மிருச்சியகடிகா" என்ற நூலில் இந்த அதிசயக் கலை விளக்கப்பட்டுள்ளது.

இந்தியாவில் தொன்று தொட்டு இருந்து வரும் 64 கலைகளில் வீடு புகுந்து திருடும் கலையும் ஒன்று என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தக்கலையில் தேர்ச்சி பெற்ற திருடன் எப்படி யாருக்கும் தெரியாமல் திருடுவான் என்பது பற்றியும் இந்த இலக்கியம் தெளிவுபடக் கூறுகிறது.

திருடன் தன்னிடம் உள்ள சில பூச்சி வகையறாக்களை வீட்டினுள் அனுப்புவானாம். வீட்டின்உள்ளே எரிந்துகொண்டிருக்கும் விளக்குகள் மெழுகுவத்திகள் இருந்தால் அவற்றை அந்தப் பூச்சிகள் சுற்றிச் சுற்றிப் பறந்து அணைத்து விடுமாம்.

வீட்டின் கதவுகளுக்கும் தன்னிடடுருக்கும் ஒரு வகை திரவத்தைப் பூசி தாழ்ப்பாள்களை சத்தம் போடாமல் செய்து விடுவார்களாம். லாவகமாக கதவுகளை கழட்டி எடுத்து விடுவதும் உண்டு. இந்தக் கலையை யாரும் பள்ளிகளில் படிப்பதில்லை.

ஆனால் வாழையடி வாழையாக பாரம்பரியமாக இந்தக் கலையில் தேர்ச்சி பெற்றவர்கள் இதைச் செய்து வந்தார்கள்.

திருடர்கள் சுமார் 24 வகைப்படுவார்கள். என்றும் திருட்டுக் கலை சுமார் 13 வகைப்படும் என்றும் இந்த இலக்கியம் கூறுகிறது.

புராதன சமஸ்கிருத ஏடுகளில் இந்தத் திருட்டுக் கலை எழுதப்பட்டுள்ளது.

''இதிகாச பத்திரிகை'' என்ற மாதத்துக்கு ஒரு முறை வெளிவரும் பத்திரிகையில் இது கூறப்பட்டுள்ளது.

வங்காள ஆசியசங்கத்தைச் சேர்ந்த சி சர்க்கராவா என்பவரும் இது பற்றி கூறியுள்ளார்.

கௌடில்யர் எழுதிய அர்த்தசாஸ்திரத்திலும் இந்தக் கலை வர்ணிக்கப்பட்டுள்ளது.

—அண்ணா 13:2:1984 பக்: 4

# படிப்பு

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

''அறிவுத் தேவையை விட கவனக் குறைவுதான் அதிக கஷ்டத்தை உண்டாக்கிபுடுது!'' அப்படின்னு ஓர் அறிஞர் சொல்லியிருக்கார்.

அதனாலே ஏட்டுப்படிப்பும் வேணும் அனுபவப் படிப்பும் வேணும்.

இது ரெண்டும் இருந்தாத்தான் வாழ்க்கைச் சக்கரம் சுலபமா ஓடும்.

இன்னைக்குப் படிக்கிறதுக்குத் துணையா இருக்கிறது புஸ்தகங்கள்.

பள்ளிக்கூடத்துலே சரியா படிக்கலேன்னா... தலையிலே இருக்கறது மூளையா களிமண்ணா அப்படின்னு கேக்கறது வழக்கம்.

ஆனா முதல் புஸ்தகமே களிமண்ணாத்தான் இருந்த துங்கறதை நினைச்சி ஆறுதல் அடைஞ்சிக்கலாம்.

ஆமாம்.

புத்தகங்கள் முதல்லே களிமண் சுவடியாத்தான் ஆரம்ப மாச்சி! எங்கே? மெசபட்டோமியாவுலே...! களிமண்ணுலே தான் எழுத்துக்களை பதிச்சாங்க! அதுக்குப் பிறகுதான் கல்லுலே பதிச்சாங்க! கட்டையிலே பதிச்சாங்க!

இப்போ அச்சாவே பேப்பர்லே பதிக்க ஆரம்பிச் சுட்டோம்.

பேப்பர்லே பதியறதுலாம் நெஞ்சுலே பதியுதாங்கறது தான், கேள்வி!

அது இருக்கட்டும்.

களிமண் படிவத்துலே பெரிய காப்பியம்லாம்கூட பதிவு பண்ணி வச்சிருந்தாங்களாம்.

''பேப்பர்லே எழுதற பழக்கம் எகிப்துலே ஆரம்பமாச்சி.

**Cyprus papyrus** அப்படின்னு ஒரு செடி அதுலேயிருந்து **papyrus** செஞ்சி அதுலே எழுதினாங்க.

இது வெளிநாடுகளுக்குக்கூட ஏற்றுமதி ஆச்சி.

ஒருதடவை எகிப்து மன்னர் இன்னொரு நாட்டு மன்னர் கிட்டே சண்டை போட்டுகிட்டு இந்த ஏற்றுமதியை நிறுத்திப் புட்டார். உடனே அந்த நாட்டு மன்னர் யோசிச்சார். தோல்லே எழுத ஆரம்பிச்சுட்டார். கால்நடைகள் தோல் இதுக்கு உபயோகப்பட்டுது.

இன்னைக்கு நாம வலது பக்கத்துலே ஆரம்பிச்சி இடது பக்கமா படிச்சிக்கிட்டுப் போறோம்லே! 14-ஆவது நூற்றாண்டுலே கிரேக்கர்கள்தான் இதுக்கு வழி காட்டினவங்க.

15-ஆம் நூற்றாண்டுலே ஜெர்மானியர் ஒருத்தர்தான் அச்சடிக்கிற முறையை கண்டுபிடிச்சார். இன்னைக்கு நிறைய புஸ்தகத்தை அச்சடிச்சித் தள்ளிக்கிட்டிருக்கோம். அதை படிக்கிறாங்களா இல்லையாங்கறதைப் பத்தி கவலைப்படாமே அச்சடிச்சித் தள்ளிக்கிட்டிருக்கோம்,

**Bacon** என்ன சொல்றாரு தெரியுமா?

''சில புஸ்தகத்தை சுவைக்கணுமாம்!''

''சிலதை முழுங்கிபுடணுமாம்!''

''சில புஸ்தகத்தை ஜீரணமே பண்ணிபுடணுமாம்!''

இப்படி சொன்னா அதை அப்படியே அர்த்தம் பண்ணிக்கிட்டு 'ருசி' பார்க்க ஆரம்பிச்சுடபுடாது. அவரு புஸ்தகம்ன்னு சொன்னா அதுலே சொல்லியிருக்கிற கருத்தை சுவைக்கணும்னு அர்த்தம்.

படிக்கறதுங்கறது வேறே!
கற்கறதுங்கறது வேறே!

படிக்க வேண்டியது சிலது இருக்கு.

பார்க்க வேண்டியது சிலது இருக்கு.

கற்க வேண்டியது சிலது இருக்கு.

திருக்குறளை கற்றேன்னு சொல்லணும்.

திருக்குறளைப் பார்த்தேன்னு சொல்லப்புடாது... ஏதோ புரட்டி பார்த்துட்டு தூக்கிப் போட்டுட்டேன்னு ஆயிடும்!

"நியூஸ் பேப்பர் வாங்கறோம். என்ன சொல்றோம்? 'பேப்பர் பார்த்தேன்... அதுலே இப்படி போட்டிருக்கு'ன்னு சொல்றோம். இன்னைய பேப்பர் வாங்கி காலையிலேயிருந்து கற்றுகிட்டிருக்கேன்னா சொல்றது?

ஒரு நூறு-இருநூறு வருஷத்துக்கு முன்னாடிகூட யாராவது செத்துப்போனா... அவங்க... பின்னாடியும் படிப்பாங்கங்கற நம்பிக்கையிலே சில புஸ்தகங்களையும் சேர்த்து வைச்சி புதைக்கிற வழக்கம்-சில நாடுகள்லே இருந்தது!

நம்ம ஊர்லேயும் சிலபேர் செத்தா புஸ்தகம் வச்சி புதைக்கலாம்னு தோணுது!

இருந்த வரைக்கும்தான் எதையும் படிக்கலே... இனிமேலாவது படி—ன்னு சொல்றது மாதிரி!

இவ்வளவு தகவலும் எதுக்காகன்னா படிப்பு ரொம்பவும் முக்கியம்ங்கறதை சொல்றதுக்காகத்தான்.

படிக்கிற புள்ளைங்களுக்கு ஒரு வார்த்தை.

உங்களுக்கெல்லாம் பரீட்சை நெருங்குது... நல்லா படிங்க! 'நெட்டுரு' போடப் புடாது... புரிஞ்சிகிட்டு படிச்சி ஞாபகத்துலே வச்சிக்கணும்.

பரீட்சை வருதுன்னா சிலபேரு அடுத்தவர்களை நம்பி இருக்கிறதும் உண்டு. அது ரொம்ப தப்பு! ஒருத்தர் அப்படித்தான் அடுத்த வூட்டுக்காரர்கிட்டே சொன்னார்!

"சார்! பரீட்சை வருது! உங்க பையனை நல்லா படிக்கச் சொல்லுங்க!" அப்படின்னார்.

"என் பையன் பேர்லே உங்களுக்கு ரொம்ப அக்கறை தேங்க்யூ சார்"ன்னார் அவர்.

"அதுக்கில்லே சார்! உங்க பையனுக்கு பக்கத்துலே உக்காந்துதான் எம் புள்ளை பரீட்சை எழுதப் போறான்! அதனாலே சொன்னேன்!"னார்.

# சென்னை பொது நூலகச் சட்டம், 1948

அமரர் அ. திருமலை முத்துசாமி

1. அரசாங்கத்தின் முன் அனுமதிபெற்று, ஒரு பொது நூலகத்தை மூடவும் அல்லது வேறிடத்திற்கு மாற்றவும் செய்தல்.

2. அரசாங்கத்தின் முன் அனுமதியோடு பொருளாகவோ, நிதியாகவோ நூல்களாகவோ நன்கொடைகள் பெறுதல்.

3. சொற்பொழிவுகள் நிகழ்த்தவும், வகுப்புகள் நடத்தவும் ஏற்பாடு செய்தல்.

4. இந்தச் சட்டத்தின் பிரிவுகளைச் சீராகச் செயல்படுத்தத் தேவையான எல்லா நடவடிக்கைகளையும் மேற்கொள்ளல்.

ஒரு மாவட்டத்திலுள்ள ஒரு பொது நூலகத்திற்குரிய எல்லாச் சொத்துக்களும் அந்த மாவட்டத்தின் நூலக ஆணைக் குழுவின் பொறுப்பில் இருந்துவரும்.

**ஒழுங்கு விதிகள்**

இச்சட்டத்தின் பிரிவுகளுக்கும், அதன் விதிமுறைகளுக்கும் முரண்படாத வகையில் நூலக நடவடிக்கைகளுக்காகவும் நிருவாகத்திற்கெனவும் பின்வரும் ஒழுங்கு விதிகளை வகுத்துக் கொள்ள நூலக ஆணைக் குழுவிற்கு இச் சட்டம் அதிகாரம் வழங்குகிறது.

1. தன் ஆட்சி எல்லைக்குள்ளிருக்கும் பொது நூலகங்களுக்குள் பொதுமக்களை அனுமதிப்பதற்குரிய நிபந்தனைகளை வகுத்தல்; அதற்கான கட்டணங்களை நிருணயித்தல்.

2. நூலகங்களின் சொத்துக்களுக்கு நாசம் அல்லது சேதம் ஏற்படாமல் காக்கவும் அவற்றைத் தவறான வழியில் பயன் படுத்தாமல் தடுக்கவும் நூலகங்களைப் பயன்படுத்துவோரிட மிருந்து உத்தரவாதம் அல்லது பொறுப்புத் தொகைபெறுதல்.

3. நூலகங்களின் சொத்துக்களை அழிவிலிருந்தும், சேதத் திலிருந்தும் பாதுகாத்தல்.

4. இச் சட்டத்தின் பிரிவுகளுக்கும், விதிமுறைகளுக்கும் புறம்பாக நடப்பவர்களை நூலகத்திலிருந்து வெளியேற்ற அல்லது விலக்க குழுவின் அதிகாரிகளுக்கும், ஊழியர்களுக்கும் அதிகாரம் வழங்குதல்.

**நிதியும் கணக்கும்**

ஒவ்வொரு மாவட்ட நூலக ஆணைக் குழுவும் தன் எல்லைக்குள் நூலக வரி (Library Cess) வசூலிக்க அதிகாரம் உண்டு. 1919-இல் கொண்டு வரப்பட்ட சென்னை நகராட்சிச் சட்டம், 1920-இல் கொண்டுவரப்பட்ட சென்னை மாவட்ட நகராட்சிகள் சட்டம் அல்லது சென்னை உள்ளாட்சிச் சட்டம் ஆகியவற்றின் கீழ் வசூலிக்கப்படும் சொத்து வரி அல்லது வீட்டு வரியுடன் சேர்த்து ரூபாய்க்கு ஆறு (1992 முதல் 10 காசுகள்) காசுவீதம் உபரி வரி ஒன்று வசூலிக்கப்படுகிறது. இந்த உபரி வரியே நூலக வரியாகும். அரசாங்கத்திடம் முன் அனுமதி பெற்று இந்த வரி விகிதத்தை உயர்த்துவதற்கு மாவட்ட நூலக ஆணைக் குழுவிற்கு அதிகாரம் உண்டு. இந்த வரியை சென்னை மாநகராட்சியும், நகராட்சிகளும், ஊராட்சிகளும் வசூலிக்கும்.

ஒவ்வொரு நூலக ஆணைக் குழுவும் 'நூலக நிதி' என்ற பெயரில் ஒரு நிதியை வைத்துக் கொண்டிருக்க வேண்டும். இச் குழுவின் செலவுகள் எல்லாம் இந்நிதியிலிருந்தே செய்யப்பட வேண்டும். நூலக வரியாகக்... (தொடரும்)

---

ஹெச். ஜி வெல்ஸின் ''வார் ஆப் தி வேர்லட்ஸ்'' என்ற புத்தகத்தைப் படித்தபோது அந்த பதினாறு வயதுப் பையனுக்கு ராக்கெட் பற்றிய சிந்தனை தோன்றியது அவரே ராக்கெட்டின் தந்தையானார்.

—அவர் கோடார்ட்

# 1996-இல் தமிழ் வாசகர்களின் ரசனை மாறுமா?

நா. குருசாமி

**ரமணிசந்திரன் நாவல்களுக்கு கிராக்கி அதிகம்**

தரமான புத்தகங்களைப் படிக்கும் ஆர்வத்தைத் தூண்டும் நோக்கத்துடன் முக்கிய நகரங்களில் அவ்வப்போது புத்தகக் கண்காட்சிகள் நடத்தப் படுகின்றன. பாளையங்கோட்டையில் திருச்செந்தூர் சாலையில் உள்ள ஹிக்கின் பாதம்ஸ் நிறுவனத்தின் புத்தக விற்பனையை நடத்திவருகிறது.

இந்தப் புத்தகக் கண்காட்சியை நேரில் சென்று பார்வையிட்டபோது தரமான புத்தகங்களைப் படிக்கும் ஆர்வம் தமிழர்களிடம் குறைந்து விட்டதோ என்ற எண்ணம் ஏற்பட்டது.

தமிழ்ச் சிறுகதைகளுக்கு புதிய வடிவம் கொடுத்து இலக்கிய அந்தஸ்து பெற்றுதந்த புதுமைப்பித்தன் கு.ப.ரா., தி ஜானகிராமன் ஜெயகாந்தன் உள்ளிட்ட எழுத்தாளர்களின் கதையைப் படிக்க புதிய தலைமுறையினர் ஆர்வம் காட்டவில்லை என்பது கவலை தரும் விஷயமாகும்.

'புதுமைப்பித்தனின் புத்தகங்கள் இருக்கிறதா என எவரும் கேட்காததால், அவருடைய புத்தகங்கள் இந்தக் கண்காட்சிக்கு வரவழைக்கப்படவில்லை என்று பாளையங்கோட்டை ஹிக்கின் பாதம்ஸ் நிறுவனத்தின் கிளை மேலாளர் ஆர்.வெங்கடபதி கூறினார்.

அனுராதா ரமணன், பாலகுமாரன். சுஜாதா ரமணிசந்திரன் ஆகியோருடைய நாவல்களை அதிகம் பேர் வாங்கிச் செல்வதாக அவர் குறிப்பிட்டார்.

குறிப்பாக பெண்கள் ரமணிசந்திரனின் நாவல்களை ஆர்வத்துடன் சிலர் வாங்கிச் சென்றுள்ளனர்.

இந்த எழுத்தாளர்களுக்கு அடுத்தபடியாக அகிலன் மு. வரதராசன் ஆகியோருடைய நாவல்களை சிலர் வாங்கிச் சென்றுள்ளனர்.

பரிணாம வளர்ச்சியில் பழையன கழிதலும், புதியன புகுதலும் இயற்கைதான். அதற்காக கீழ்த்தரமான மேலோட்டமான புத்தகங்களுக்கு இன்று அதிக வரவேற்பு கொடுப்பது கலாசார சீரழிவுக்கு வழிவகுக்கும் என்பதில் ஐயமில்லை.

இந்தப் புத்தகங்கள் அதிகம் விற்பனையாவதற்கு அவற்றின் விலை குறைவாக இருப்பதும் ஒரு காரணமாகும். விலை குறைவாக இருக்கிறது என்பதற்காக இத்தகைய புத்தகங்களை மட்டுமே படிக்கும் போக்கு அதிகரித்தால். தமிழர்களின் சிந்தனைத் திறன் முனை மழுங்கிப் போய்விடும். என்பதில் சந்தேகமில்லை.

புதுக்கவிதை நூல்களை எடுத்துக் கொண்டால், வைரமுத்துவின் கவிதை நூல்கள் மட்டுமே அதிகம் விற்பனையாகின்றன.

எம்.ஆர். காப்மேயரின் "செல்வந்தர் ஆவது எப்படி" "நீங்கள் விரும்புவது எதுவானாலும் அதை அடைவது எப்படி" போன்ற நூல்கள் விறைவில் விற்றுத் தீர்ந்து விட்டதாக ஹிக்கின் பாதம்ஸ் கிளை மேலாளர் தெரிவித்தார்.

5 தொகுப்புகளைக் கொண்ட "பாபாசாகேப் டாக்டர் அம்பேத்கர்" என்ற நூலும் அதிகமாக விற்றுள்ளன. இதுவரை 10செட் புத்தகங்கள் (மொத்தம் 50 புத்தகங்கள்) விற்பனையாகியுள்ளன.

தாழ்த்தப்பட்ட சமுதாயத்தினரின் முன்னேற்றத்துக்காகப் பாடுபட்ட இந்த தலைவரைப் பற்றி அறிந்து கொள்ள வேண்டும் என்ற ஆர்வம் பலருக்கு இருப்பது இதன் மூலம் தெரிய வந்துள்ளது.

உடல் நலத்தைப் பேண வேண்டும் என்ற ஆர்வம் காரணமாக, மூலிகை மருத்துவம் தொடர்பான நூல்களும் அதிகமாக விற்பனையாகின்றன.

தமிழக அரசின் விருது பெற்ற பொன்னீலனின் "புதிய தரிசனங்கள்" என்ற நாவல் மூன்று தொகுப்புகளாக வெளியிடப்பட்டுள்ளது இந்த மூன்று நூல்களின் விலை ரூ. 300.10 சத தள்ளுபடி போக இந்த மூன்று நூல்களையும் ரூ.270க்கு வாங்கலாம்.

ஆனால், இவ்வளவு விலை கொடுத்து இந்த நூல்களை வாங்க அதிகம் பேர் முன்வர மாட்டார்கள். எனவே, இத்தகைய தரமான நூல்களை மலிவு விலையில் கிடைக்கச் செய்ய அரசு மானிய உதவி அளிக்கலாம்.

ஒட்டு மொத்தமாகப்பார்த்தால், தரமான நூல்களை வாங்கிப் படிப்போரின் எண்ணிக்கை குறைந்து வருகிறது. இந்தப் போக்கு மிகவும் கவலையளிக்கக்கூடியதாகும்.

இதைச் சரிசெய்ய தமிழக அரசு தன்னால் இயன்ற நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

அமெரிக்க யேல் பல்கலைக்கழக சட்டக் கல்லூரி நூலகத்தில்

காதல் அரும்பியது!

# கிளிண்டன்-ஹில்லாரி : நூலகத்தில் காதல்

ஈகிள்

சட்டக் கல்லூரி நூலகம் ஒன்றில் ஒரு மூலையிலிருந்து ஹில்லாரியை ஒரு இளைஞன் வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தான். இதைக் கவனித்த ஹில்லாரி நேரே அந்த இளைஞனிடன் சென்று, ''நீ என்னை முறைத்துப் பார்த்தபடி இருக்கிறாய். நானும் உன்னைப் பார்த்துக் கொண்டிருக்கிறேன். அதனால், நாம் இருவரும் ஒருவரை ஒருவர் அறிமுகம் செய்து கொண்டால் என்ன? என் பெயர் ஹில்லாரி... உன் பெயர்...?'' என்று கேட்டார்.

இது மாதிரி தாக்குதலை எதிர்பார்க்காத அந்த இளைஞர்... நெற்றி வியர்வையைத் துடைத்தபடி, ''என் பெயர் கிளிண்ட்டன்'' என்றார்.

இப்படித்தான் இவர்களின் முதல் சந்திப்பு நிகழ்ந்தது!

பழகப் பழக ஹில்லாரியின் அழகைவிட அறிவால் கிளிண்ட்டன் மிகவும் ஈர்க்கப்பட்டார்!

''இந்தப் பெண்ணைத் தான் கல்யாணம் செய்து கொள்ளப் போகிறேன்'' என்று ஹில்லாரியைத் தனது அம்மாவிடப் கூட்டிச் சென்று கிளிண்ட்டன் அறிமுகப்படுத்தியபோது... அம்மாவுக்கு ஷாக்! கிளிண்ட்டனைத் தனியாக அழைத்துக்கொண்டு போய், ''பார்ப்பதற்கு எந்த விதக் கவர்ச்சியும் இல்லாமல் இருக்கிறாளே...'' என்று சொல்ல, ''நான் சாதிக்க வேண்டியது நிறைய இருக்கிறது. அதற்கு நான் அதிகமாக உழைக்க வேண்டும். இந்த நிலையில் கவர்ச்சியான ஒரு பெண்ணைக் கல்யாணம் செய்துகொண்டு அவள் பின்னால் 'ஜொள்' விட்டுக் கொண்டிருக்க எனக்கு நேரமில்லை! எனக்குத் தேவை புத்திசாலியான ஒரு பெண்!'' என்று கிளிண்ட்டன் சொன்னார்.

'வெற்றியடைந்த ஒவ்வொரு மனிதனுக்குப் பின்னும் ஒரு பெண்மணி இருப்பாள்' என்று சொல்வது ஹில்லாரியைப் பொறுத்தவரை நூறு சதம் பொருந்தும்! நிர்வாகத்தில் ஹிலலாரி ஒரு சூரர்... ஸாரி, சூரி!

சிக்காக்கோ நகரில் ஒரு நடுத்தரக் குடும்பத்தில் பிறந்தவர் ஹில்லாரி.



அமெரிக்கக் குடியரசுத் தலைவர் கிளிண்டனின் இல்லத்தரசி திருமதி. ஹில்லாரி ரோதாம் யேல் பல்கலைக் கழகத்தில் சட்டம் பயின்ற போதுதான் ஆணழகன் கிளிண்டனை முதன்முறையாகச் சந்தித்தார். கிளிண்டனும் அங்கே தான் சட்டக்கல்லூரி மாணவர். 1975-ல் இவர்களது காதல் திருமணம்.

ஜனாதிபதியின் மனைவியாக இருப்பதால் என்னென்ன பிரச்னைகள் என்று பத்திரிகைகளுக்குத் தொடர்ந்து எழுதுகிறார் இவர் எழுதும் கட்டுரைகளை அமெரிக்காவில் உள்ள 100 தினசரிப் பத்திரிகைகள் வெளியிடுகின்றன. வெள்ளை மாளிகையிலிருந்து, இரகசியப் போலீசாரைக்கூட ஏமாற்றிவிட்டு அடிக்கடி வெளியில் போய், பொதுமக்களின் பிரச்னைகளை நேரில் காண்கிறார். கடை விதிகளில், மியூஸியத்தில், பார்க்குகளில், பீச்சுகளில் இவரைப் பார்க்கிறவர்கள் அமெரிக்க ஜனாதிபதி கிளிண்டனின் மனைவி மாதிரியே இவர் இருப்பதாகப் பேசிக் கொள்கிறார்களாம் இப்படி வெளியே செல்லும் போதெல்லாம் அடையாளம் தெரியாதபடி எளிய ஆடை அணிந்து செல்கிறார்.

## புத்தகம் சேர்ப்பது கலை

சிலர், தபால் தலைகளைச் சேர்க்கிறார்கள். சிலர், பேனாக்களைச் சேர்க்கிறார்கள். சிலர், பூச்செடிகளைச் சேர்க்கிறார்கள். இப்படி, பொழுது போக, பொழுது போக்காக எதையாவது சேர்ப்பது என்பது நம் நாட்டிலும் இன்று நிறைந்த அளவில் பரவி வருகிறது. காசுகளைச் சேர்த்து வைப்பவர்கள், பழைய காசுகளை ஏகப்பட்ட விலைக்கு விற்கிறார்கள். புகழ்பெற்ற மனிதர்களுடைய கையெழுத்துக்களைச் சேர்த்து வைத்தால் பிறகு இவை ஏகப்பட்ட விலைக்குப் போகிறது. இதைப் போல, புத்தகங்களைச் சேர்த்து வைப்பது பலருக்கு இப்போது ஒரு புதுப்பொழுது போக்காகி வருகிறது. ஒவ்வொருவரும் நூற்றுக் கணக்கில், ஆயிரக் கணக்கில் சொந்தமாகப் புத்தகங்களை வாங்கிச் சேர்த்து வருகிறார்கள். மற்றப் பொழுதுபோக்குகளைக் காட்டிலும் இந்தப் பொழுது போக்கால் நாட்டிற்கும் நல்லவர்களுக்கும் பயன் இருக்கிறது!

---

## ஏன் திருடக்கூடாது ?

ஒரு நாள் ஒரு பையன் நூலகத்தில் ஒரு நூலைத் திருடி விட்டான். தள்ளி நின்றிருந்த பணிமகன் கையும் களவுமாய் பிடித்துவிட்டான். திருடிய நூலையும் திருடியவனையும் நூலகத் தலைவரிடம் கொண்டு வந்து நிறுத்தினர்.

நூலகத் தலைவர் கேட்டார்? என்ன புத்தகம் திருடினாய்' அதன் பெயர் என்ன?

''ஏன் திருடக்கூடாது'' என்ற புத்தகம் சார் என்றான் திருடன்!

---

Edited. and Published by NOOLAGAGNANI Dr. Pa. PERUMAL, M. A., M. Lib. Sc., Ph. D; from 6, Mu. Va. Street, Arumbakkam, MADRAS — 600 106. Phone No 484 5034. Printer P. AYYASAMY at Thirumalai Deivam Art Printer 14, Yadaval Street, Aminjikarai, MADRAS—600 029.



28-வது தேசிய நூலக வார விழாவில் மாண்புமிகு சட்ட அமைச்சர் கே. ஏ. கிருஷ்ணசாமி, தேசிய பார்வையற்றறோர்க்கான ஒலி நாடாவை, பொது நூலக இயக்குநர் திரு. இரா. கண்ணன் அவர்களிடம் வழங்கினார்.

**NOOLAGAM ILAKKIYAM** Tamil Monthly December, 1995
*Regd No. TN / MS (N) / 922* *R.Dis 4441 / 95.E*



சங்கப்பலகை தொடக்க விழாவில் காங்கிரஸ் மூத்த தலைவர் திரு ஜி. கே. மூப்பனார் அவர்கள் **இந்திராகாந்தியின் ''மலரும் நினைவுகள்''** தமிழ் நூலை வெளியிட முதல் பிரதியை சங்கப்பலகையின் முதல் உறுப்பினரான முதுபெரும் எழுத்தாளரும் **''எழுத்து''** பத்திரிகை ஆசிரியருமான **திரு. சி. சு. செல்லப்பா** அவர்கள் பெற்றுக் கொண்டார்.